# *Our Worker at Pandatherripu wins ALL ROUNDER's PRIZE*

**Mr.** Sinnavan Stephen Raj, our Worker at Pandatheripu Church has won the Prof: Thurairajah All Rounder Memorial Prize. This award was given at the Annual Convocation of the University of Jaffna, which took placeon on Wednesday the 6th of October 1999.

Mr. Stephen Raj is an Old Boy of Jaffna College, Vaddukoddai. Apart from his pastoral work, he is also serving a Vice President of the Y M C A Pandatheripu and Director for youth Activities of this Association.


# THE MORNING STAR

Registered as a Newspaper (Established 1841) published Every Friday

Vol 159 Jaffna Friday 19th, 03 rd Nov, Dec 1999 No. 23

RICHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE


### *An Important letter from the Archbishop of Canterbury*

Dear Peter
Moderator CNI)

Thank you so much for your letter of 16th October about the disruption by groups calling themselves "the Anglican Church of India".

I want to assure you that the Church of North India and the Church of South India are the sole inheritors of Angilicanism in India, and inherit all in India that once belonged to the Church of India, and Pakistan, Burma and Ceylon. There can be no question of the structures of the Anglican Communion recognising any other body in India or any of their bishops other than those of the Church of North India or the Chnrch of South India.

I trust you will assure all concerned of our unshakeable commitment in the matter.

Your Sincerely
† George Canturr


### *Puthukudiyiruppu Bomb Victims were helped*

The CSI workers in the Vanni area and the Project Director Mr Ratnavel visited the area where due to the ariel bombing, 22 civilians were killed and another 42 were Injured on the 15th of Sept 99 at Puthukudiyiruppu. This pastoral team visited all the houses of the victims, consoled them and gave a cash donation. Similarly they visited the Puthukudiyiruppu Hospital, prayed for the injured and also made a cash donation to each of them. The People of the area and the Catholic Priest of that area thanked and appreciated the gesture of the CSI.

## Wedding

The Marriage of Mr. K. Kularanjan, Accounts Clerk, Diocesan Office, Vaddukoddai son of late K Kulasegaram and Mrs Kirupaimalar Kulasegaram and Joyce, Teacher, Chundikuli Girls College, daughter of late Thuraiayah and Mrs S. R Thuraiayah took place on 19th November 1999 at St. John the Bapitst's Church, Chundikuli.

The marrage was solemnized by the Rev N. S. P. Nesakumar Rev S. C. Arnold and the Rev. J Jebamohan participated at the Marriage service. The Rev J. Jebamohan preached the homily After the Wedding Service lunch was served at the Chundikuli Girls' College, Hall.



The Marriage of Thevasuthan (London) son of late N. E. Alagaratnam, Retired G S, and Mrs Pushpadevi Alagaratnam and Nivethana, daughter of Mr. & Mrs. P. S. Gnanaseelan, Rtired Teachers, of Chavakachcheri, took place at the C. S. I. Church, Colombo on 11th October 1999.

The Marriage was solemized by the Rev P. R. Navendraguloon assisted by Rev. E. W. Lawrance.

After the service the Reception was at Hotel Sapphire, Wellawatte.

### *Rev. A A Paul's Vist to Canada and London*

The Rev. A. A. Paul, Principal Designate, of Jaffna College, Vaddukoddai met the Alumni at Toronto and London.

Rev. A. A Paul and Mr. C. B Bavinck were the guests of honour at Alumni Dinner held in Toronto on 6th November 1999.

Many Old Students their families and former teachers of Jaffna College attended the Dinner

The Toronto Alumni collected about Can: $ : 33, 000/ towads JCAA Toronto Millennium Scholarship Fund.

They have also promised to help the College in many ways and pledged their support to the new Principal and Staff.

Rev. Paul also preached at St Magaret's Anglican Church on 7th of November 1999.

In London Rev Paul met a few Alumni and the Committes of the Association. London Alumni also pledged its support and expressed desire to raise a Scholarship Fund.

Before leaving for the Trustees Meeting the principal Designate met the Committees of Colombo Alumni Association. at a Dinner. Mr. G. Rajanayagam, the Principal also attended

The Colombo Alumni Association also pledged its support to the College and promised to help in many ways.

### *Jaffna College First in Drama Competition*

The Primary School drama group won the first place in the all Jaffna Drama Competition organised by the Theatre Action Group of Jaffna. The Drama was titled "Minuvathellam Ponnallo".

The Script was written by Miss A. J Ganeshan of the College Staff and that too won a Second place in the Script Competition. The drama was directed and trained by Miss S Narendran, a teacher of the College.

### Jaffna College O. B. A. London

The Jaffna College Alumni Association of London has published another news letter for the month of September, 1999. It carries news items of Jaffna College, proposed scholarship schemes and news of Alumni around the world.

Mr. and Mrs. W. D. Kulatungam (Former Vice-Principal of College, now resident in Canada) were the Guests of Honour at their Annual Dinner on September 1999. A good gathering of Old Boys and Girls attended the function.

## JAFFNA CHRISTION UNION

## competitions 1999

### Gold Medalists

**Essay Tamil Under 20:**
Miss Shamila Sivakumaran; donated by Jaffna Dioceses Church of South India

**Verse Writing Tamil Under 20:**
Mas Gunasingam Jebasuthan; donated by Church of Ceylon Anglican Mission.

**Memory Verse Tamil Under 20:**
Miss Christtilla Thamari Jesupalan; donated by Methodist Mission

**Memory Verse English Under 20:**
Miss Christtilla Thamari Jesupalan, donated by Jaffna Y M C A

**Sermon Tamil Under 20:**
Mas. W. G. Paul; donated by Salvation Army

**Best Actor**
Mas. V. P. Thavendra; donated by Chundukuli Girls College.

உதயதாரகை
02 19,03-11,12-1999

# ஆயிரம் ஆண்டு காலம்.

''உதா சூரியன் ஒளியினாலே
உலகம் செழித்தோங்கி உயர்வு
அதை போல
புதிய புத்தாயிரம் ஒளி வீசுது பார்
இமயம் தாண்டிப் புன் சிரிப்புக்
காட்டுது பார்''

இன்றைய உலகு தனது 2வது ஆயிரமாம் ஆண்டின் ஓட்டத்தை முடித்துக் கொண்டு, புதிய ஆயிரமாம் ஆண்டின் ஓட்டத்தை ஆரம்பிப்பதற்கு தன்னை ஆயத்தம் செய்து வருகின்றது. அவ்வகையில் உலகெங்கிலும் புதிய ஆயிரமாண்டின் ஆட்சியினை பற்றிய கருத்துக்களும், விளக்கங்களும் செய்திதாளகளிலும், செய்தி ஊடகங்களிலும், திருச்சபைகளிலும், தங்கள் கருத்துக்களையும் எண்ணங்களையும் பரிமாறிக் கொண்டிருக்கின்றனர். இன்றைய நாட்களில் புதிய ஆயிரம் ஆண்டுகாலம் (MILLENNIUM) கிறிஸ்தவர்களாகிய எமக்கு கிறிஸ்துவின் இறுதி கால ஆட்சி நிலவும் ஆயிரம் ஆண்டு காலத்தையே குறித்து நிற்கின்றது (திருவெளி 20:2 - 7) இதனை பற்றிய பல விளக்கங்கள் திருமறையில் காணக்கூடியதாகவுள்ளது.

திருவெளி 20 இன்படி 'ஆதியில் தோன்றிய பாம்பாகிய பறவை நாகத்தை அவர் பிடித்தார். அலகை என்னும் சாத்தான் என்று அழைக்கப்படும் அப்பாம்பைப் பிடித்து ஆயிரம் ஆண்டளவு கட்டி வைத்தார். பின் அதைப் பாதாளத்தில் எறிந்து குகையை அடைத்து அதற்கு முத்திரையிட்டு ஆயிரம் ஆண்டுகள் முடியும் வரை அது நாடுகளை வருசிக்காமல் தடுத்தார் (20: 2 - 3) தீர்ப்பிடும் அதிகாரம் பெற்றவர்கள் அரியணையில் அமர்ந்தார்கள். (20 4) இயேசுவுக்குச் சான்று பகிர்ந்து கடவுளது வார்த்தையை அறிவித்ததற்காக தலை வெட்டுண்ட கிறிஸ்தவர்கள் மீண்டும் உயிர் பெற்று கிறிஸ்துவோடு ஆயிரம் ஆண்டுகள் முடியும் வரை ஆட்சி புரிந்தவர்கள். இந் நிகழ்ச்சியோடு ஆயிரம் ஆண்டு தொடங்கி செயற்படுகிற இக்காலம் முடிந்ததும் சாத்தான் சிறையிலிருந்து விடுவிக்கப்படுகிறான். அவன் இறைவனுடைய விரோதிகளைப் போருக்கு ஒன்று சேர்க்கின்றான் அவர்கள் தோற்கடிக்கப் படுகின்றனர் அவனது முடிவில்லாத் தண்டனை தொடங்குகிறது. (20: 7 - 10) அதற்குப்பின் இறந்தோரின் எஞ்சியோரின் பொது உயிர்ப்பு நிகழ்கிறது அவர்கள் தீர்ப்பிடப்படுகின்றனர் (20: 5 11 - 15) பின்பு புதிய வானகமும் புதிய வையகமும் தோன்றுகிறது.

வையகத்தில் அமைதியும் நேர்மைமிக்க இடைக்காலம் பற்றிய கருத்து திருமறை சேராத யூத வெளிப்பாட்டு இலக்கியங்களில் காணப்படுகிறது. இது புதிய வானத்தையும் புதிய பூமியையும் (ஏசா 65: 17) மையமாகக் கொண்ட உயர்ந்த நம்பிக்கைகளோடு வருங்காலத்தைப் பற்றிய உலகு சார்ந்த மெசியா நம்பிக்கைகளை ஒத்துப்போகச் செய்ய உதவியது. சில ராபிகளின் தர்க்கங்களில் இத்தகைய இடைக்காலம் ஏற்படுமா? என்ன பிரச்சனை அல்லது அது எவ்வளவு காலத்திற்கு நீடிக்கும் என்ற பிரச்சனையே இடம்பெற்றது.

திருவெளி 20 சாவின்மேலும் தீய சக்திகளின்மேலும் இருகட்ட வெற்றியை விவரிக்கிறது. இரு கட்டங்களிலும் சாத்தான் தோற்கடிக்கப்படுகிறான். உயிர்ப்பு நிகழ்கிறது தீர்ப்பு அளிக்கப்படுகிறது. இருகட்டங்களும் ஆயிரம் ஆண்டு காலத்தால் பிரிக்கப்படுகின்றன. இந்த இடைகாலத்தில் ''விலங்கையோ அதன் சிலையையோ தொழாதவர்கள் அதன் அடையாளத்தை நெற்றியிலோ கையிலோ பெற்றுக் கொள்ளாதவர்களும்'' கிறிஸ்துவோடு வெற்றியடைந்து ஆட்சி செய்கிறார்கள். (20 4 - 6) இரண்டாம் கட்டத்தில் தீயசக்திகள் நித்திய தண்டனையாக ''நெருப்புக்கடலில்'' எறியப்படுவதற்காகவே விடுவிக்கப்படுகின்றன. (20 5- 14, 15

**- இ. ராஜ்குமார் -**

1 கிறிஸ்தவ மறை சாட்சிகளுடைய அரசின் தன்மை என்ன இடம் எது?

2 எந்தப் பொருளில் சாத்தான் கட்டப்பட்டுள்ளான்? எந்த அளவுக்குச் செயலாற்றல் தடுக்கப்பட்டிருந்தான்?

3 ஆயிரம் ஆண்டுகாலம் நிகழ் காலத்தோடும் இயேசுவின் இறுதிக் கால வருகையோடும் கொண்டுள்ள தொடர்புகள் எவை?

4 ஆயிரம் என்ற எண்ணை அப்படியே எடுத்துக்கொள்ள வேண்டுமா? அல்லது திரு வெளிப்பாட்டு நூலில்வரும் மற்ற எண்களைப் போல அதை அடையாளமாக எடுத்துக்கொள்ள வேண்டுமா?

5 திருவெளி 20 இல் விவரிக்கப்படும் நிகழ்ச்சிகளுக்கும் 19: 11 - 21 இலும் நூலின் மற்றப்பகுதியிலும் விவரிக்கப் படும் நிகழ்ச்சிகளுக்கும் உள்ள தொடர்பு என்ன? இக்கேள்விகளுக்கு அளிக்கும் பதிலை பொறுத்து ஆயிரம் ஆண்டு காலம் பற்றிய வெவ்வேறு விளக்கங்கள் அமையும்.

## யாப்பாணக்கல்லூரி தர்மகாத்தர் சபை

யாழ்பாணக்கல்லூரி தர்மகர்த்தா சபையின் கூட்டம் அக்டோபர் மாதம் 24, 25ம் திகதிகளில் அமெரிக்காவில் உள்ள பொஸ்ரன் நகரில் நடைபெற்றது. யாழ்ப்பாணத்தில் இருந்து நமது பேராயரும் திருமதி விமலா ஜேபநேசன் அவர்களும் வண அ. அ போல் அவர்களும் திரு C. B. பவிக் அவர்களும் சென்று கலந்து கொண்டனர். கூட்டத்தில் தர்மகர்த்தா சபையின் புதிய தலைவராக வண போல் கிலேட்டன் அவர்கள் தெரிவு செய்யப்பட்டார். இது வரை காலமும் தலைவராக பணிபுரிந்த Telfer Mook தொடர்ந்து ஒரு சாதாரண உறுப்பினராகப் பணியாற்றி வருவார்.

## பேராசிரியர் க. கைலாசபதி நினைவு



பேராசிரியர் கைலாசபதி 25-11-1982 தமது 49வது வயதில் இயற்கையெய்தினார் ஈழத்தில் தோன்றிய மிகச்சிறந்த அறிஞர்களில் ஒருவர் பேராசிரியர் கைலாசபதி இவருடைய சிறப்பு காய்தல் உவத்தல் அற்ற ஆய்வும், கட்டுரை ஆக்கமுமாகும், எந்தத் திசையிலிருந்து என்ன நன்மை வந்தாலும் அதனை மறைக்காது வெளிப்படையாக எடுத்துக் கூறியவர் இம்மேதை.

மகாகவி சுப்பிரமணிய பாரதி எளிய நடையில் கவிதை யெழுதுமாறு செய்தவர் டாக்டர் G U. போப் அவர்களே என்று முதன் முதலாகக் கூறியவர் பேராசிரியர் கைலாசபதியேயாகும் அன்னாரின் நினைவு தினத்தில் காய்தல் உவத்தல் அற்ற ஆய்வு நம் நாட்டில் மலர வேண்டும் என இறைவனை வேண்டுகின்றோம்.

## திருவும் அருள் திருவும்



அருள் திரு: இந்த வருடம் நத்தாருக்கு மக்களுக்கு என்ன பரிசில் கொடுக்கலாம் என்று மூளையைக் குழப்பிக் கொண்டிருக்கிறேன்

திரு: பேசாமல் எல்லாருக்கும் இரண்டு இரண்டு பென்ரோச் பற்றறி கொடுத்து விடுங்கோ. எல்லாரும் மிகுந்த மகிழ்ச்சியடைவார்கள்.

- மணிமாறன்

## ஊழியருக்கு வாகனம்

கனடாவில் திருச்சபை ஒன்றி பணியாற்றும் வண சுதந்திரா சிவலிங்கம் கொழும்பில் உள்ள ஊழியருக்கு ஒரு வாகனம் வாங்குவதற்கு துணைபுரிவதாக வாக்களித்துள்ளார் தனது கொடையின் முதலாவது தொகுதியை நமது பேராயர் மூலமாக கொழும்புக்கு அனுப்பி வைத்தார்

## வத்தளை ஆலயம்

வத்தளைத் திருச்சபை படிப்படியாக முன்னேறி வருகின்ற வேளையில் தேவாலயம் ஒன்று இவ்விடத்தில் கட்டப்பட வேண்டும் என்கிற ஒரு வாஞ்சை எங்களுடைய உள்ளங்களில் உதித்தது.

ஆரம்ப காலத்தில் சபையினரின் வீடுகளிலும் அதன்பின்பு வாடகைக்கு ஒருவீட்டிலும் ஆராதனைகள் நடத்தப்பட்டு வந்தது. இதனை வளர்த்தவர்கள் நமது கொழும்புச் சபையினர்

சபையானது வளர்ச்சியடையும் போது 1995 ம் ஆண்டு Averiwatte Rd, Wattala யில் எமது ஆதீனம் எமக்கென்று ஒரு வீட்டை வாங்கியிருந்தது. நிரந்தரமான ஒருகுருவானவரும் எமது சபையின் ஊழியத்திற்கென நியமிக்கப்பட்டார். ஞாயிறு ஒய்வு நாள் ஆராதனைகள், வேதாகமப்படிப்பு, மற்றும் வாலிபர் சங்கம், பெண்கள் சங்கம், என யாவும் ஒழுங்காக நடத்தப்பட கடவுள் சித்தங்கொண்டார்.

சபையானது வளர்ந்து இன்று முன்னேற்றமான முறையில் கடவுளுக்கு மகிமையாக விளங்குகின்ற போது தேவாலயம் ஒன்று கட்டப்பட வேண்டிய அத்தியாவசியத்தை நாம் உணர்ந்து அதற்கான முயற்சிகளை மேற்கொண்டோம் ஆதீனமும், சபையினரும், சபையோடு சம்பந்தப்பட்ட வெளிநாடுகளில் வசிப்போரும் எமக்கு கட்டிட நிதிக்காக பண உதவி செய்தார்கள் அவர்களின் உதவியினால் இன்று ஒரு அழகிய ஆலயத்தை இவ்விடத்தில் நாம் காணமுடிகிறது.

இவ்வாலய கட்டிடத்தை கட்ட பொறுப்பெடுத்துக்கொண்டு இம்மட்டில் கட்டி முடித்துத்தந்துள்ள எமது Egnineerரும், Arch

(வத்தளை ஆலயம் 14-11-99 ஞாயிற்றுக்கிழமை நமது பேராயரினால் பிரதிஷ்டை செய்யப்பட்டது அப்பொழுது வண E N லோறன்ஸ் ஆற்றிய உரையின் சாரம்)

itectரும், Contractorரும் ஆகிய திரு கிறிஸ்டி நவரட்ணம் அவர்களுக்கு நாம் மிகவும் நன்றியாக இருக்கிறோம்.

இந்த ஆலய கட்டிடத்தை இம்மட்டில் கட்டி முடிக்க கிருபை செய்த கடவுளுக்கும் மற்றும் பல விதத்திலும் உதவி ஒத்தாசை புரிந்துள்ள யாவருக்கும் நன்றி கூறிகொண்டு. இவ்வாலயத்தின் திறப்பை பேராயர் அவர்களிடம் கையளிக்கும்படி எமது Engineer ரும், Architectரும், Contractorரும ஆகிய திரு கிறிஸ்டி நவரட்ணம் அவர்களை அன்புடன் வேண்டுகின்றேன்.

## தாரகைஒளி

''ஆளப்பிறந்தவன் ஆண் மகன்; அவன் இஷ்டத்துக்கு ஆடிப் பிழைக்க வேண்டியவள் பெண்; கள் இப்படிப் பேசிடும் பண்பு இருக்கும் வரை நம் நாடு உருப்பட முடியுமா?

அறிஞர் அண்ணா

## விமோசனம் இல்லையா

''யாருக்குத் தெரியும்? நாம் அழிந்து போகாதபடி கடவுள் மனம் மாறித் தமது உக்கிர கோபத்தை விட்டுத் திரும்ப மாட்டாரோ''

யோனா 3:9

விரக்தியின் விளிம்பில் நின்று நினிவே மன்னன் கூறிய வார்த்தைகள் இவை.

இன்று நமது நாட்டை நினைத்துப் பார்க்கும் போது இந்த எக்கம் வருகின்றது.

''ஆண்டவரே நாம் அழிந்து போவது உமக்குச் சித்தமா'' என்று கடலின் சீற்றத்தைக் கண்டு குமுறிய சீடர்களைப் போலவே நாமும் குமுறுகின்றோம்.

நாடு கிடுகிடு பாதாளத்தை நோக்கிப் போய்க் கொண்டிருக்கின்றது. தமிழ் மக்களின் நிலை சிறைக்கைதிகளின் நிலையை விட மோசமாகவிருக்கின்றது இன்று விடியும் நாளை விடியும் என்று சொல்லிச் சொல்லி காலத்தை முடித்துவிட்டோம்.

இலங்கையில் தினசரி 11 பேர் போரினால் இறந்துபடுகின்றனர் 21 இலங்கைத் தமிழர் நாட்டை விட்டு நிரந்தரமாக வெளியேறுகின்றனர் அவர்களைப் பார்த்து பெருமூச்சு விடுவதா? நமது நாடு திருந்திவிடும் என்று நமக்குள்ளே சமாதானம் சொல்லிக்கொள்வதா?

1948ல் நமது நாடு சுதந்திரமடைந்த பொழுது இத்தகைய துன்பங்கள் தமிழருக்கு வருமென்று நமது தலைவர்கள் கனவிலும் சிந்திககவில்லை ஆங்கிலேயர் சென்ற பின்பு, ஏமாற்று, வீண்பழி, சிறை, சித்திரவதை தாய் மறைந்த பின் சிற்றன்னை கொடுமை போல் நமது அரசுகள் நம்மை நடத்துகின்றன.

பெற்ற தந்தை தாயிருந்தால் உனக்கிந்த கதி வருமோ ஐயா? என்று புலம்புவதே வழக்கமாகிவிட்டது.

புதிய ஆயிரம் வருட ஆருகை நம்பிக்கை தருமா? ஆனைக்கொருகாலம் பூனைக்கொரு காலம் என்பது பழமொழி மாராவுக்குப் பின் ஏலிம் என்பார்களே இறைவா மாரா நீண்டு கொண்டு போகின்றதே!

புதிய வருடத்தில் நினிவே மன்னனைப் போல் இறைவனை வேண்டுவோம்.

போரின் உக்கிரம் மறைந்து மக்கள் இன்பமாக வாழும் காலம் மலரட்டும்

எஸ். ஜே. எழுதுவது

# ஒரு வீரனின் மறைவு

நவம்பர் மாதம் 19ம் திகதி வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணக் கல்லூரியின் முன்னாள் ஆசிரியர் கலாநிதி D. J. துரைரத்தினம் அமெரிக்காவிற் காலமானார். இவருடைய மரணம் சடந்த சில வாரங்களாக எதிர்பார்க்கப் பட்டதெனினும் அவர் மரணத்தறுவாயில் இருந்தபோது நடந்து கொண்ட விதம் — சிறந்த படிப்பினையாகவிருந்தது.

கலாநிதி D. J துரைரத்தினம் யாழ்ப்பாணக் கல்லூரியின் முன்னாள் துணையதிபர் காலஞ்சென்ற திரு K C துரைரத்தினம் அவர்களின் மகன். இவருக்கு நான்கு சகோதரர்களும் ஒரு சகோதரியும் இருந்தனர். நான் அடிக்கடி உமது பெற்றோரின் குடும்பம் எனது பெற்றோரின் குடும்பமும் ஒரே மாதிரி என்று கூறிக்கொள்வேன். இவர் யாழ்ப்பாணக்கல்லூரியில் என் இளைசகோதரன் மறைந்த Dr ஜெயசீலனின் சகமாணவர்.

பின்னர் இவரும் நானும் யாழ்ப்பாணக்கல்லூரியில் ஏறத்தாழ நான்கு வருடங்களாக ஒன்றாகக் கற்பித்து வந்தோம். 1974ல் அவர் அமெரிக்கா சென்று அங்கேயே குடியேறிவிட்டார். இங்கு கஷ்டப்படும் மக்களைப் பற்றி எழுதியபொழுதெல்லாம் தாராளமாக அவர்களுக்கு உதவிசெய்து வந்தார் பண்பாளர்; பரோபகாரி.

சென்ற ஜூன் மாதம் அவரை நான் போலிங்கிறீன் பல்கலைக் கழகத்திற் சந்தித்தபொழுதும்முகம் மிகவும் வாட்டமடைந்திருந்தது. ஒரே இருமல்!! என்ன சுட்டி Anything Serious? என்றேன் ''ஒன்றுமில்லை - சில ஆய்வுகள் நடக்கின்றன'' என்று மட்டும் கூறினார் அதற்குமேல் அவரை நான் எதுவும் கேட்கவில்லை. கார் ஓட்டிக்கொண்டிருந்த அவர் மனைவிமட்டும் - சற்றுச் சோகமாகக் காணப்பட்டார்.

நான் யாழ்ப்பாணம் வந்த பின்பு. எதிர்பார்த்த படியே பலர் அவர் மிகவும் பலவீனமடைந்து விட்டாரென்றும், சுவாசப்பை மிகவும் வேகமாச் சீர்கெட்டுப் போய்க் கொண்டிருக்கின்றதென்றும் கூறினார்கள். ஆனால் நான் அவருடன் தொலைபேசியில் பேசும் போதெல்லாம் நோயைப் பற்றிக் கேட்டால் ஆய்வுகள் தொடர்ந்து நடக்கின்றன, டாக்டர்கள் சரி செய்து விடுவார்கள் என்று கூறிக்கொண்டார்.

இந்த வருடம் நவம்பர் மாதம் அமெரிக்கா சென்றிருந்த போது மீண்டும் அவர் வீட்டிற்குச் சென்று பார்த்தேன் மூக்கில் பிராணவாயு சிலிண்டருடன் இணைக்கப்பட்டுள்ள ஒரு குழாய் இருந்தது. சுவாசப்பை தன் வேலையைச் செய்ய மறுத்ததால், நாள் முழுவதும் பிராணவாயு (Oxygen) குழாய் மூக்கில் இருந்தது.

அவரைப்பார்த்த பொழுது நோயாளிபோற் காணப்படவில்லை முகத்தில் பழைய வசீகரத்தையும் பொலிவையும் கண்டேன். அவர் முன்னேற்றத்தையும் கண்டு பாராட்டினேன். மனைவியைப் பார்த்து ''பார்த்தீரா'' என்றார். சுட்டி கலகலப்பாகப் பேசினார். நண்பர்களைப் பற்றி எத்தனையோ நகைச்சுவைக் கதைகளைப் சொன்னார். யாழ்ப்பாணக்கல்லூரியைப் பற்றி எத்தனையோ ஆலோசனைகளைக் கூறினார்.

மரணம் தனக்குச் சமீபமாக வந்துவிட்டதென்று உள்ளூர அறிந்திருந்தார். ஆனால் மனைவியையோ குழந்தைகளையோ பயமுறுத்த அவர் விரும்பவில்லை நான் அவரோடு பேசிக்கொண்டிபொழுது இந்த நோயுள்ளவர்கள் உயிர் வாழ்வது 35 விகிதம் தான் சாத்தியம் என்று வைத்தியர்கள் கூறுகின்றனர். ஆனால் நான் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை'' என்றார்

இவ்வாறு துணிச்சலுடன் தனது காரியாலய அலுவலர்களை வீட்டுக்கழைத்து வேண்டியபணிகளைப்பற்றி உத்தரவு கொடுத்து கொண்டிருந்தார். மீண்டும் காரியாலயத்துக்குப் போவது பற்றி தெரிவித்தார்.

நவம்பர் மாதம் மூன்றாம் திகதி அமெரிக்காவில் கடுங்குளிர் ஆரம்பித்தது அன்று பனி (Snow) கூட விழத்தொடங்கியது. இது அவர் உடல் நிலையைப் பெரிதும் பாதித்திருக்கவேண்டும் சிலிண்டரிலிருந்து வந்த பிராணவாயுவையே சுவாசிப்பதற்கு மிகவும் கஷ்டப்பட்டார்.


வெள்ளி 5ம் திகதி மாலை ஒகாயோ வைத்திய கல்லூரி மருத்துவமனைக்கு கூட்டிச் சென்றார்கள், சில நாட்கள் அதிதீவிர கண்காணிப்பு பிரிவில். பின்னர் சாதாரண அறையில். ஒரு நாள் அவரை வைத்திய சாலைக்கு சந்திக்கச் சென்றேன். எழுந்திருக்க முடியாத பலவீனம். படுத்தபடியே என்ன நடக்குது? என்று ஹாஸ்யமாக கேட்டார். மரண பயமோ, கடவுளோடு சலிப்போ காணப்படவில்லை. மனைவியை உற்சாகப்படுத்துவதிலும் தைரியமூட்டுவதிலுமே கவனம் செலுத்தினார். உணவருந்த மனமில்லை, ஆனால் மற்றவர்களுக்குத் தைரியமூட்ட அமைதியாக உணவு உட்கொண்டார்.

தாம் இருந்த வைத்தியசாலையின் சிறப்பைக் கூறிப் பெருமைப் பட்டார். விரைவில் வீட்டுக்கு வருவேன் என்று கூறினார்.

ஆனால் இச்சம்பவம் நடந்து பத்து நாட்களின் பின் அவர் ஆவி உடலைவிட்டுப் பிரிந்தது. நான் கொழும்பில் நின்றபொழுது ''அவர் போய்விட்டார்'' என்றார்கள். விளையாட்டிலும் வாழ்க்கையிலும், ஒரு வீரனாகவே திகழ்ந்தார்.

1970ல் அவருடைய தகப்பனார் திரு K. C. துரைரத்தினம் மறைந்த பொழுது பின்வரும் கவிதையுடன் எனது கட்டுரையை முடித்தேன். அதனையே மீண்டும் திரு K. C துரைரத்தினத்தின் அருந்தவப் புதல்வன். வைரமுடைய நெஞ்சத்தான் ஏழை கட்கிரங்கும் பண்பாளன் D. J. துரைரத்தினத்தினைப் பற்றிய கட்டுரையிலும் எழுதி முடிக்கிறேன்.

Sampson hath Quit himself like Sampson and heroically finished a life heroic.



# தாலேலோ!

கண்ணதாசன்

சோதிமணிப் பெட்டகமே சுடரொளியே
யூதருக்கு
ஆதிமகனாய்ப்பிறந்த அருந்தவமே
தாலேலோ!

வானளந்த திருக்குமரா! மனிதகுல
மருத்துவனே!
தேனமுதத் திருவாயால் சித்திரங்கள்
தீட்டவந்தாய்!

பல்லாண்டு பல்லாண்டு பாலைவனம்
போலிருந்து
எல்லாமும் இழந்துவரும் இஸ்ரேலை
வாழவைப்பாய்!

அந்நாளில் நாலோர்கள் ஆன்றோர்கள்
பெரியோர்கள்
சொன்னபடி மீட்பதற்குத் தோன்றிவந்தாய்
தாலேலோ!

மாளிகையும் இல்லைகாண் மஞ்சமில்லை
என்றாலும்
ஏழைத் தொழுவில்வந்த இறைமகனே
தாலேலோ!

உன்னைப்போல் செல்வனைநான் உலகெங்கும்
கண்டதில்லை
என்னைப்போல் ஏழையை நீ எங்கேனும்
கண்டதுண்டா?

போட்ட விதைமுளைக்கும் பொன்னான
பூமியிலே
வாட்டமில்லாப் பயிராக வந்து
விளைந்தவனே!

மாளிகைத் தொட்டிலுக்கு வாய்க்காத
பெருமையெல்லாம்
ஆநிரைத் தொழுவினுக்கு ஆளித்தார்
எங்கோவே!

## The New Millennium

What is drawing the attention of all of us presently living on the Earth is the forth - coming birth of the New Millennium. Our News papers are giving wide publicity and have even gone to the extent of giving a Count - down to the date of the event (01 - 01 - 2000).

We are accustomed to celebrating the X'mas and New Year but this year's celebrations are going to be a very grand. due to the fact, we are going to enter a New Millennium. What does "Millennium" mean? Millennium according to the Oxford Dictionary, 'is a period of 1000 years, and also a future time of great happiness and prosperity for everyone'.

The leading Hotels and Clubs here have taken advantage of of the very happy mood in which the major section of the population is in, and have advertised about their intention to celebrate the birth of the millennium, through out the night of the event, with dances and other variety entertainments and have requested customers to book their tickets in time, to avoid disappointment.

As we all know, in this world there is always happiness and sorrow side by side. While a sector of the population is joyous about the entering the New Millennium, another sector is sorrowing and fearing to enter the Millennium. Their passimistic view is because of the present situation throughtout the world, with wars and rumours of Wars' political instability and unrest among communities, with special phobia about our own country.

Majority of the world's population belong to the Christian Faith. According to Christianity, Jesus Christ, the Son of God, is expected to return to Earth 'in the same manner He ascended to Heaven' some 2000 years ago. (Refer Bible Acts: Chap: 1: Verse 11) Also prior to His return, there will be certain signs such as wars and remours of wars, earth quakes, unrest and clashes among communities etc.. and many of these are occurring at present. So this sector of the population are wondering as to whether the New Millennium will mark the Second Coming of Our Lord Jesus Christ, down to Earth.

We are almost at the end of the penultimate month of the 20th Century and living in very exciting times. Let us not fret and fume but keep cool and wait for what our Creator of both of Heaven and Earth, has in store for us in the New Millennium.

C. A. B

## Remembering



### Rev C. D. Velupillai

Rev. C. Daniel Velupillai was born to hindu parents at Atchuvely on the 20th of April 1860 He attended the American Mission Primary school at Atchuvely. As he proved to be an excellent student the headmaster spoke to Rev. Smith the mission manager of the boarding school at Tellipallai and was admitted there. On completing his secondary education he entered the teachers training college in the same mission compound. He accepted Jesus as his Saviour and decided to serve him in 1878. He was posted to the mission primary school at Thondaimannar, but went back to Tellipallai. During this period he was asked to write Christian readers and textbooks. He also wrote graded Sunday school sheets. He was also the Tamil editor of the Morning Star.

Pastor Velupillai was called to the ministry and was ordained in September 1984. He was appointed to the parish in Panderterrupu as pastor in charge. In 1897 pastor Vellupillai was elected secretary of the council of churches and continued in this office till 1905 Manipay was his next parish. He served there from 1906 to 1910. Tellipalai was his third parish from 1910 to 1920 The Old Dutch church was on the verge of collapse a new church building supervised by pastor Vellupillai was consecrated in 1915. Tellipallai was an important parish and a large one. In addition to pastoral duties he served as supervisor of religious studies in the mission schools, and was the secretary of the girl's boarding schools.

Pastor Velupillai was busy writing the history of the American mission for the first hundred years 1816 — 1916 It was a labor of love and he enjoyed doing it In October 1906 at the Annual Convention meeting pastor Velupillai began the delivery of a series of addresses each covering ten years of the mission history. The last ten years of the century was reviewed in October 1915, and at the centennial of 1916 a summary was read of the whole hundred years In June 1918 the renowned Indian Saint Sadhu Sundar Singh came to Jaffna with his message of hope and salvation. He stayed with the pastor's family when his mission at Tellipallai was conducted. It was a unique experience of spiritual fulfillment for the family.

In 1920 Pastor Velupillai and his wife went to South India to see their son. Both were taken ill and were treated at the American mission hospital in Mathurai. Pastor. Vellupillai died on 4th November 1921 and was buried in the Christian cemetery there. At the time of his death his Magnus opus "A History of the American Ceylon Mission 1816—1916" was in manuscript form His wife got it published posthumously in 1922. This book is unique and a mine of information Rev J H Dickson in his introduction to the book in December 1922 has written thus - "None were present on that memorable occasion of the centennial in 1916 will ever forget the eloquent impassioned appeal to a glorious past as an incentive to renewed faith for the future" A memorial plaque for him is found in the church of Tellipalai.

V. Visvalingam

## Service of Thanksgiving for the Life of Miss Grace Vadivelu

I had the good fortune to attend the above service held at Rivercourt Methodist Church, Hammersmith, London on 18th September. Miss Vadivelu taught generations of Vembadi girls and also served as the Head of the Lower School till she retired in 1997.

Many former pupils, old girls of Vembadi and members of her own family attended the service. Her dedication to the task of teaching and character building as well as her humanity and humility were brought out.

Three tributes which were part of the service made us aware of some of Miss Vadivelu's admirable qualities. Mrs Chelvaranee Kiruvanayagam (nee Satcunan) said 'I was saddened by the loss of a fine, upstanding lady and good no-nonsense teacher with sound and tested old fashioned values of teaching. My lasting memory of Miss Vadivelu is that of a very smart, tidy lady with not a strand of her tidy hair out of place, saree neatly pleated and tucked behind sometimes looking stern, but always with a soft centre.

Miss Vadivelu spent three quarters of her life at Vembadi as student, teacher and later as Head of the Lower School. As a teacher she was a strict disciplinarian, firm but fair and gave all her students a though grounding in the 3 R's. She was a many faceted person. Not only was she a teacher at Vembadi, but was involved in the various activities of St. Peter's Church. She led in the singing of the thevaram, helped in the Sunday School. did the flower arranging as well as preparing the Communion table.

'She was a very earing person - the eldest of three brothers and a sister, an aunt to the children of her siblings and cousins. Her care and generosity extended well beyond her family. I am told that in the late 80's when food parcels were needed for refugees she delved deep into her meagre pension to give the very best. A lasting tribute to her is the singing of the Vembadi school hymn in Tamil மன்னு புகழ்—ஒளியுறவே. which was composed by her'.

Two other tributes contributed by Mrs. Chelliah (nee Rajah) and Mrs. Kiruba Paramananthan (nee Moses) were read out. Mrs. Chelliah spoke of the invaluable part played by Miss Vadivelu in looking after and educating her siblings and later the members of a younger generation and seeing to it that they became men and women of calibre.

Mrs. Paramanantham, in her message, spoke of the privilege of having been both student and colleague of Miss Vadivelu's 'She had a great sense of responsibility to God, her family, her school and the children she taught. Every work she undertook she did well because her conscience would not permit her to fall below the very high standards she set for herself.

After Grace Akka and I had been teaching at Vembadi for a while, I came to recognize one of her most admirable traits. She was very proud of the achievements of her erstwhile pupils When they did well she truly rejoiced in their success and told them so. D. T. Niles once said, "A person does not die as long as there is someone to miss her." Well Grace Akka cannot ever die because there are so many of us whose lives have been made richer by her friendship. May she walk with her maker for all eternity. Sherina Niles who read this tribute spoke of the trouble Miss Vadivelu took to encourage and embolden her when she was a fledgeling teacher of just eighteen.

The service was well organized by the committee of the O. G. A. Members of the clergy - Rev. Jacob and Rev. Alexander - participated by leading the prayers and giving an address and many old girls and some relatives took part by reading lessons and singing devotional songs. It was sheer joy to sing much loved lyrics such as 'ஆத்துமமே என் முழு உள்ளமே' 'என்னை மறவா இயேசுநாதா' and 'ஆனந்தமே பரமானந்தமே' 'with such feeling and gusto in the heart of modern day London. For a moment or two I felt we were back at St. Peter's, Jaffna!

After the service we were treated to a sumptuous meal provided by the family and the Vembadi Old Girls' Association.

Shanti Arulanantham